30-04-2024.
Elec.OP.No.36/2022

ம. சா. 2 ஜீவாநந்தம் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

8 முதல் 10 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :-

மனுதாரர் ஆயக்குடி பேரூராட்சியில் 16 ம் வார்டுக்கு போட்டியிட்டார். 28.1.2022 முதல் 04.02.2022 ம் தேதிவரை வேட்புமனு பெறப்பட்டது என்றால் சரிதான். 16 ம் வார்டுக்கு 8 பேர் போட்டியிட்டனர். 9 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர். 5.2.2022 ம் தேதியன்று வேட்புமனு கூராய்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். வெற்றிபெற்ற வேட்பாளர் பெயர் சரஸ்வதி க/பெ வாஞ்சிநாதன். வேட்புமனு கூராய்வின்போது தனித்தனியாக எங்கள் முன்னிலையில் கூராய்வு செய்தார்கள் என்றால் மற்ற வேட்பாளர்களின் வேட்புமனு பற்றிய விவரங்களை மற்ற வேட்பாளர்களுக்கு தெரியும்படி தெரியப்படுத்தவில்லை. அவரவர் வேட்புமனுவில் உள்ள விவரங்களை மட்டும் அவரவர்களுக்கு தெரிவித்தார்கள். நான் மனுதாரரின் கணவர் என்ற முறையில் நான் அவருடன் இருந்தேன். வேட்புமனு கூர்ந்தாய்வு செய்யும்போது தவரான நபர்கள் வேட்புமனு செய்துள்ளார்கள் அதை ரத்து செய்யவேண்டும் என அப்போது நாங்கள் சொல்லாததால் தற்போது சொல்லி வருவதால் அது முரண்தடைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் முன்மொழிந்த விவரம் அப்போது எங்களுக்கு தெரியாது. முன்மொழிந்தவர்கள் பற்றி யார் என தெரிந்துகொள்ளும் கடமை, உரிமை என் மனைவிக்கு உள்ளது என்றால் முதன் முதலில் தேர்தலில் போட்டியிட்டதால் அதுபற்றி எங்களுக்கு தெரியவில்லை. மற்றும் யார் யார் முன் மொழிந்தார்கள் என்ற விவரம் பற்றி தேர்தல் அதிகாரி எங்களுக்கு தெரியப்படுத்தவில்லை. தேர்தல் அதிகாரிகள் முன்மொழிபவர் பற்றி தெரியப்படுத்தவில்லை என மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். வேட்புமனு பரிசீலனை சமயத்தில் அதுபற்றிய குறைபாடுகளை தெரிவிக்காமல் அதை ஒப்புக்கொண்டுவிட்டு தற்போது இம்மனுவை தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரரை சரியான உயிருடன் இருக்கும் நபர்தான் முன்மொழிந்துள்ளார் என்றாலும், நான் சொல்வது போல் இறந்த நபர் முன்மொழியவில்லை என்றாலும், முறையாக முன்மொழிந்துள்ளதால் தேர்தல் செல்லும் என்றாலும் சரியல்ல. வாக்கு எண்ணிக்கையில் குறைபாடு இருந்தால்தான் சமூகம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய இயலும் என்றும், கூராய்வு சம்மந்தமாக மனு தாக்கல் செய்ய இயலாது என்றும் சொன்னால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :- வழக்குரைஞரின் வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.04.30 16:06:46 +0530

Principal District Judge,
Dindigul.